**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 179** **நாள்: 27.12.2017**

**இந்திய குடியரசு தின கொண்டாட்ட அணிவகுப்பில் கலந்து கொள்ள சென்னைப் பள்ளி மாணவி தேர்வு செய்யப்பட்டுள்ளார் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மேதகு இந்திய குடியரசுத் தலைவர் தலைமையில் 26.1.2018 அன்று புதுடில்லியில் நடைபெறுகின்ற 69வது குடியரசு தின கொண்டாட்ட அணிவகுப்பில் (Republic Day Celebration) பங்கேற்க சைதாப்பேட்டையில் உள்ள சென்னைப் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 9ம் வகுப்பு பயிலும் மாணவி டி.ராமலட்சுமி அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார். மாணவி தேசிய மாணவர் படையில் பயிற்சி பெற்று வருகிறார். தமிழகத்தில் இருந்து இவ்வணிவகுப்பில் கலந்து கொள்ள இருக்கின்ற 7 மாணவிகளில் இவரும் ஒருவர். மேலும் மற்ற 6 மாணவிகள் கல்லூரியில் பயின்று கொண்டு இருப்பவர்கள். மாணவி டி.ராமலட்சுமி அவர்கள் மட்டும் சென்னைப் பள்ளி அளவில் முதன்முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**